DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.41/2019**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | டாக்டர் போஸ் | Caste: | |
| Father's Name: | பொன்னுசாமி | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 21.11.2025

( எதிரிகள் ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த கடந்த 31.05.2025ம் தேதி ஓய்வு பெற்று இராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். கடந்த 16.02.2014–17.02.2014ம் தேதி இரவு 12.50 மணிக்கு இராமநாதபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது துரத்தியேந்தல் கிராமத்தை சேர்ந்த குமரவேல் மகன் செல்வராஜ் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்டார். அவரை பரிசோதிக்கையில் அவர் தன்னை இரண்டு தெரிந்த நபர்களும், நான்கு அடையாளம் தெரியாத நபர்களும் 16.02.2014 அன்று இரவு 09.00 மணியளவில் பாண்டியூரில் வைத்து அருவாளால் தாக்கியதாக கூறினார். அவர் சிகிச்சைக்கு சேரும்போது சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதிக்கையில் தலையின் பின்பகுதியில் 5x3x2 cm அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. வலது மார்பில் 2x2 cm அளவில் ஒரு

ஆழமான குத்துக்காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற பிறகு ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட இரண்டு காயங்களும் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.7**. 17.02.2014 ம் தேதி காலை 7.30 மணியளவில் புள்ளங்குடி கிராமத்தை சேர்ந்த ஞானசேகரன் மகன் பழனிமுருகன், வயது 24 என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்டார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் தன்னை 20 அடையாளம் தெரியாத நபர்கள் 16.02.2014 ம் தேதி இரவு 10.00 மணியளவில் பாண்டியூரில் வைத்து அருவாளால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதிக்கையில் அவருக்கு வலது மார்பில் 6x1 cm அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கி சாதாரண காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.8**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

செல்வராஜ் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றால் 22.01.2014 ம் தேதி வரை சிகிச்சை பெற்றுள்ளார். நான் விசாரிக்கும்போது மதுக்கடையில் தகராறு ஏற்பட்டதாக என்னிடம் சொல்லவில்லை. பாண்டியூரில் எந்த இடத்தில் வைத்து சம்பவம் நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது நிலை தடுமாறி பின்புறமாக கரடுமுரடான கல்லில் விழும்போது அவருக்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். மார்பு பகுதியில் ஏற்பட்ட Punctured

Wound ஒரு முள் போன்ற பகுதி குத்தினால் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். அதேபோல் பழனிமுருகனும் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது நிலை தடுமாறி கீழே விழுந்தால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)